Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 05 21-07-94 வியாழக்கிழமை ஓசை 153

## யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் பெண் குழந்தைகள் பிறப்பு அதிகம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் 13491 பேர் பிறந்துள்ளதாகவும், 6019 பேர் மரணமடைந்துள்ளதாகவும் யாழ், செயலக பதிவுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இக்கணிப்பின்படி பெண்குழந்தைகளின் பிறப்பு வீதம் இந்த வருடம் ஐம்பத்து நான்கு சதவீதம் எனவும் கடந்த வருடம் முழுமையாக மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இப்புள்ளி விபரங்கள் பெறப்பட்டுள்ளன. இதேவேளை பிறந்த குழந்தைகளுக்கான போசாக்கின்மை வீதம் தற்போது அதிகரித்து வருவதாகவும் தெரியவருகிறது. கடந்த ஆண்டு இது அறுபத்திமூன்றுசதவீதமாகும். பெறப்பட்ட இப்புள்ளி (6 ஆம் பக்கம் பார்க்க)

# வல்வையில் குடியிருப்புக்கள் மீது நேற்று விமானக் குண்டு வீச்சு!

## குடும்பஸ்தர் பலி; ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

**சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் வடமராட்சிப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திய மூர்க்கத்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலினால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒருவர் காயமடைந்தார். பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் நாசமாகின.**

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வல்வெட்டித்துறைப் பகுதிக்கு வந்த அவ்ரோ விமானமும் உலங்கு வானூர்தியும் பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டபின் பலாலி தளத்தில் தரையிறங்கின.

தொடர்ந்து 11மணியளவில் வல்வெட்டித்துறை நோக்கி வந்த இரண்டு சியாமா செட்டிரக குண்டு வீச்சு விமானங்கள் ஆதிகோவிலடியை மையமாகக் கொண்டு அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின இவை அப்பகுதியில் வீழ்ந்து வெடித்த போதிலும் எதுவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை.

மீண்டும் 11.45ற்கு வந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்களில் ஒன்று வல்வெட்டித்துறைச்சந்தியை இலக்காகக் கொண்டு குண்டு ஒன்றை வீசியதுஇக்குண்டு வீழ்ந்துவெடித்ததில் நாராயணசாமி பாலசுப்பிரமணியம் (வயது 40) என்ற நான்கு பெண்பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின் அங்கு மரணமானார். இதே குண்டுக்கு இலக்கான கோபாலசாமி கோபால் ராகப்பிட்டி என்பவர் தலையில் காயமடைந்தார். மேலும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## இடிபாடுகளுக்கு மத்தியிலிருந்து முனகிக்கொண்டிருந்தவரை மீட்டோம்

- நேரில் கண்டவர் விபரிப்பு

(வடமராட்சி)

குண்டு வீழ்ந்து வெடித்த சில நிமிடங்களுக்குள் உயிரையும் பாராது ஓடிச்சென்று இடிபாடுகளை அகற்றி பாலசுப்பிரமணியத்தை மீட்டோம்.

குண்டு வீசப்பட்டதும் யாராவது அகப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தில் ஓடிய போது வீடொன்று இடிந்து போய் கிடந்தது அவ் இடி

தம் தோய்ந்த நிலையில் கிடந்தவரை மீட்டு வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து

## தேர்தல் சட்ட விதிகளை ஐ. தே. க. மீறியது

-சிறிமாவோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் பிரசாரம் தொடர்பன சட்ட விதிகள் ரூபவாகினி மற்றும் இலங்கை வானொலி நிலையங்களால் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டி சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவற்றின் பணிப்பாளர் குமார் அபேசிங்காவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

வானொலி, தொலைக் காட்சியில் இடம்பெற்றுவரும் தேர்தல் பிரசார நிகழ்வில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பா.உ. களின் ஆயுதங்களை மீளப்பெற ஆலோசனை

(கொழும்பு)

காபந்து அமைச்சரவையிலுள்ள 91 அமைச்சர்களைத் தவிர ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெற ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தேர்தலுக்கு முன்னர் இவர் (6ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

முல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளியொருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கலைப்பிரியன் / சேது (பழனிவேல் இராகுலன் இல: 105, கொட்டடி, யாழ்பாணம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இம் மாவீரனின் வித்துடல் (6ஆம் பக்கம் பார்க்க)



லெப். கலைப்பிரியன் (சேது)

## ஜனாதிபதிவிஜேதுங்காவின்கூட்டம் எம்பிலிபிட்டியாவில் ரத்துச்செய்யப்பட்டது

டோம்.

இவ்வாறு நேற்றைய தினம் வல்வெட்டித்துறை சந்தை ஒழுங்கையில் நடந்த குண்டு வீச்சு தொடர்பாக இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

இச் சம்பவம் குறித்து அவர் விபரிக்கையில்; குண்டு வீச்சு விமானங்கள் வான்பரப்பில் வேகமாக வட்டமிட்டுக் கொண்டிருந்தபோதே நாங்கள் பாதுகாப்பான இடத்தில் பதுங்கிக்கொண்டோம்.

பாட்டுக்குள் அகப்பட்டு இரத்

சென்றோம். அங்கிருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆகாயத் தாக்குதலினால் பரீட்சைகள் குழம்பின

(வடமராட்சி)

வடமராட்சி பகுதியில் நேற்றுக் காலை சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்களும். உலங்கு வானூர்தியும் நடாத்திய தாக்குதல்களினால் எழுந்த பதற்றத்தில் பரீட்சைகள் குழம்பியதுடன் மாணவர்களும் சிதறியோடினர்.

காலை 10.30 முதல் 12 மணிவரையும் குண்டு வீச்சு விமானங்கள் பரவலாக மேற்கொண்ட குண்டு வீச்சு தாக்குதல்களை அடுத்து அப்பகுதிக்கு வந்த உலங்கு

(6ஆம் பக்கம் பார்க்க )

## சிறிலங்கா கடற்படையினர் மீனவர் மீது தாக்குதல்

(தொல்புரம்)

சுழிபுரம், காரைநகர் கடற்பரப்பில் ரோந்து வந்த சிறிலங்கா கடற் படையினர் நேற்றுக் காலை 8.35 மணியளவில் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலை ''சுப்பர் டோறா'', ''வீரயாசூரயா'' ஆகிய பீரங்கிப் படகுகளில் வந்த சிறிலங்கா கடற்படையினர்சுழிபுரம், திருவடிநிலை, சவுக்கடித்துறைக் கடல் பரப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் சூட்டிற்கு மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை தீவுப்பகுதியிலிருந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கடற்றொழிலாளர் ஒருவர் படுகாயமடைந்தார். அல்பிரட்ராசா சந்திரகுமார் என்பவரேகாயமடைந்தவராவார்.

பிற்பகல் 1.30மணிக்கு மண்டைதீவு படையினர் கரையோரப்பகுதி நோக்கி எறிகணை தாக்குதல் நடத்தினர்.

## பரீட்சை வினாத்தாள் அடுத்த வாரம்வரும்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அடுத்த கிழமை யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர ஏற்பாடுகள் செய்ப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலிக்கு இவை எடுத்துவரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு கொண்டுவரப்படும்.

எனவே இப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறவுள்ளதாக யாழ். கல்வி வலயம்-2 இன் கல்வி அதிகாரி திரு. கந்தசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். கல்வி வலயம் - 1 இல் 33 பரீட்சை நிலையங்களிலும் யாழ். கல்வி வலயம் - 2 இல் 30 பரீட்சை நிலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## மேடை சரிந்து வீழ்ந்ததில் 6 பேர்படுகாயம்

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்கா கலந்து கொண்ட எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் மக்களால் திட்டமிட்டுக் குழப்பப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்நேரத்தில் டி. பி. விஜேதுங்கா மேடையில் அமர்ந்திருந்தார்.

கூட்ட மேடை உடைந்து வீழ்ந்ததில் ஆகக்குறைந்தது ஆறுபேர் படுகாயமடைந்து இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில் ஒருவர் ஜனாதிபதியின் விசேட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிசார் என தெரிய வந்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள சூரியகந்த பகுதி அமைந்துள்ள இடமான எம்பிலிப்பிட்டிய நகரில் நேற்று மாலை நான்கு மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது. அப்போது மேடையில் இசைக்கச்சேரி ஒன்றுநடைபெற்றுக்கொண்டிருந்ததாகவும் அதனை ஜனாதிபதி பார்த்துக்கொண்டிருந்ததாகவும் தெரிய வருகிறது.

மேடை உடைந்து வீழ்ந்ததைத் தொடர்ந்து மக்கள் கலவரமடைந்து சிதறியோடியபோது பலர் கீழே வீழ்ந்து மிதியுண்டனர். மக்கள் கூட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது சுமார் பத்து நிமிடங்களில் அப்பகுதி வெறிச்சோடியது.

இதேவேளை உண்மையில் என்ன நடந்தது என்பதை

(6ஆம் பக்கம் பார்க்க)

## டி. பி. காயத்திற்கு உள்ளாகியிருக்கலாம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் கூட்ட மேடை சரிந்து வீழ்ந்ததும் மேடையிலிருந்த ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா விரைந்து மோட்டார் வாகனமொன்றில் அவசர அவசரமாக ஏற்றிச் செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

இச் சம்பவத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா காயமடைந்தாரா என்பது குறித்து விபரம் எதுவும் பெற முடியவில்லை என பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ. பர்னாண்டோ தெரிவித்தார். இங்கு இடம்பெற்ற குழப்பங்களையடுத்து இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

## புலிகளின் பெயரைக்கூறி மோசடி புரிந்தவர் கைது

### விபரம் தெரிந்தோர் தகவல் தரவும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி மோசடிகளில்ஈடுபட்ட மூன்று பொதுநபர்கள் மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து, கைது செய்யப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் விசாரணையில் உள்ளனர்.

★ திருவிளங்கன் வாசுதேவன், வேறுபெயர்: முகுந்தன், வயது: 18, முகவரி: 16[16, வளன்புரம், கொழும்புத்துறை

★ டேவிற் ராஜ்குமார், வேறுபெயர்: ரவி, வயது 20, முகவரி: வவுனியா, பூவரசங்குளம், இராமயன்கல், அச்சாகடை, மாற்று முகவரி:

( 6 ஆம் பக்கம் பார்க்க )



திருவிளங்கன் வாசுதேவன்



டேவிற் ராஜ்குமார்



தர்மலிங்கம் ஜெகநாதன்

## ஜனாதிபதியின் பிரசார கூட்டங்கள் ஒத்திவைப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டிய தவிர்ந்த மேலும் ஒரு இடத்தில் சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தலைமையில் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற இருந்ததாகவும் இவை ஒத்திவைக்கப்பட்டதாகவும் பிரான்ஸ் வானொலி தெரிவித்தது.

கேகாலை மாவட்டத்தில் தெரணியகலவில் நேற்று தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று நடைபெற இருந்ததாகவும் இச் சம்பவத்தைத் தொடர்ந்து ஏனைய கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒற்றையாட்சியின் கீழ் பிரச்சினைக்கு தீர்வு

### சந்திரிகா ரூபவாகினியில் உரை

(கொழும்பு)

ஈழம் என்ற அரசாங்கத்திற்குப் பதிலாக ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் செய்தும் வடக்கு கிழக்கு இணைப்பு என்பதற்குப்பதிலாக பிரதேச ரீதியில் சமஷ்டியை ஒத்ததீர்வையும் முன்வைப்பதே எமது நோக்கம் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட முதன்மை வேட்பாளரும், சிறிலங்கா சுதந்திரக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

கிளாலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சன்முகநாதன் சுபாஸ்கரன் 651521831v இலக்கமுடைய அடையாள அட்டை காணாமல்போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (8880)

15-7-94 அன்று மட்டுவிலில் இருந்து யாழ்-செல்லும் வழியில், சிங்கர் கத்திரிக்கோல் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், யாழ். ஆஸ்பத்திரி முன்பாக உள்ள கௌரி தொழிலகத்திலோ அல்லது-உஷா கம்பனியிலோ- சிங்கர் கம்பனி சாவகச்சேரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (சி-9957)

கிளாலிக் கடற்கரையில் 16-7-94 இல் மண்ணிறப்பையுடன்(BrownBag) கடிதங்கள், அல்பம்மற்றும்சிலபொருட்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணி மனையில் ஒப்படைக்கவும். (8883)

17-7-94 அன்று கிளாலிக் கரையில் பேசுடன் முக்கிய பொருட்களுடன் அடையாள அட்டை இல 335591151V தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் ந. வாசுகி மே/பா கா. கிருஸ்ணபிள்ளை 260/18 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (8882)

## கண்காட்சித் திகதி மாற்றம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இம்மாதம் 22,23,24-ந் திகதிகளில் நடைபெற இருந்த மேற்படி கண்காட்சி 28,29 30ந் திகதிகளில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம் - கண்காட்சிக் குழுவினர். (8885)

## விமானம் நோட்டம்

சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 7.35 மணியளவில் சுழிபுரம், மூளாய், பொன்னாலைப் பகுதிகளின் வான் பரப்பில் பிரவேசித்து பல தடவை சுற்றி வட்டமிட்ட பின் அராலிப் பகுதியை நோக்கி சென்றது. இரவு வேளை திடீரென விமானம் வந்ததையிட்டு மக்கள் சற்று பதற்றமடைந்து காணப்பட்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:- 1975. 07. 10



வீரச்சாவு:- 21. 07. 1991

### வீரவேங்கை பிலிப்ஸ்

(செபஸ்ரியன் றொக்சன்)

மண்ணின் விடியலை மனதில் பதித்தவன்
விடுதலைக் களத்தில் வெற்றிக்கு குதித்தவன்
ஆதிக்க வாதியை அடித்துத் துவைத்து
விடுதலைப் பாதையை வெளிச்சப்படுதத
புலியாகி எழுந்தவன்.

செபஸ்ரியன் வீதி,
குருநகர்.

நின்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(8876)

## 3 ஆம் ஆண்டு நினைவாக



### மேஜர் கோணேஸ்

(மார்க்கண்டுதாமோதரம்பிள்ளை)

தாயின் மடியில் 16. 05. 1970
தமிழீழ மண்ணில்:- 21. 07. 1991

## நினைவு கூருகின்றோம்...

### 21-07-1994...

1986-ம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - மூதூர்ப் பகுதியிற் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 22 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு காரைநகரில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். மாமா|பாலையா** (சுப்பிரமணியம் பாலேந்திரம் - காட்டுப்புலம் தொண்டமானாறு)

திருமலையில் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட 03 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிறவுண் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். மாவிட்டபுரத்தில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஊரெழுவைச் சேர்ந்த சிற்றூர்திச் சாரதியான தமிழ்ப் பொதுமகன்.

1990-ம் ஆண்டு மன்னார் - மாந்தை, பாப்பாமோட்டைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகனவிபத்தில் எம்மை பிரிந்த,

**சரத்பாபு** (சபாரத்தினம் சிவகுமார் - 10, பெரியதம்பனை - மடுக்கோயில்)

மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு மணலாற்றில் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். பிரதாப்** (சண்முகம் முரளி-செங்கலடி-மட்டு)

**கப்டன் நியூட்டன்** (அந்தோனி செபமாலை - முதலைக்குத்தி. உயிலங்குளம் - மன்னார்)

**2-ம் லெப். செல்வம்** (செல்லையா சத்தியசீலன் - தாமரைக்குளம், அடம்பன் - மன்னார்)

ஆ. க. வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து புல்லாவெளிவரை முன்னேறிய சிறிலங்கா இராணுவச் சங்கிலித் தொடர்மீது தகர்த்தெறிந்து நுழைதற் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். நளன்** (சச்சிதானந்தம் நிர்மலன் - பாண்டிருப்பு, கல்முனை-அம்பாறை)

**லெப். யோகன்** (கிட்ணர் உதயகுமார் - பெரியபுல்லுமலை - மட்டு)

**அல்வின்** (சிவபாலன் கருணாகரன் - ஆரையம்பதி - மட்டு)

**வேணு** (கந்தசாமி பிரபா (கல்லடி - மட்டு )

**ராஜபாரதி** (நாகலிங்கம் சிறிசியானந்தன் - ஆயித்தியமலை - மட்டு)

**ஆரமுது** (விஜயகுமாரி தங்கவேல்-விளாவெட்டுவான் - மட்டு)

**லெப். இக்பால்** (நாகலிங்கம் கிருஷ்ணகுமார்-காந்திநகர் - திருமலை)

**2-ம் லெப். எடிசன்** (முருகு குமார் - 3-ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)

**2-ம் லெப். நிர்மல்** (பீற்றர் ராஜ்குமார் - செல்வநாயகபுரம் - திருமலை)

**இல்பேட்** (யோசப் ஜோனி-அன்புவழிபுரம்-திருமலை)

**அன்புதாஸ்** (மாணிக்கம் துஸ்யந்தன்-கண்ணகிபுரம், உவர்மலை-திருமலை)

**அருள்ராஜ்** (கந்தசாமி கலையமுதன்-5-ம் வாய்க்கால், பன்குளம்-திருமலை)

**லெப். கருணா** (நடராசா குகேந்திரன்-வெடிவைத்

## பளை மகாவித்தியாலயம் கல்லூரியாக தரமுயர்வு

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் கிளி/பளை மகாவித்தியாலயம் பளை மத்திய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளது முன்னர் இப்பாடசாலை மகாவித்தியாலயமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் இரு பாடசாலைகள் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதுடன் இரண்டு பாடசாலைகள் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. (86)

## வேலை வாய்ப்புக்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர் அவசரமாகத் தேவைப்படுகின்றனர். அனுபவத்திற்கேற்ப உதவுத் தொகை வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ளவர்கள் 22.07.1994 அன்று தாவடியிலுள்ள பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதி அலுவலகத்துக்கு காலை 9. 30 மணிக்கு சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்கவும்.

### வேலை வாய்ப்புக்கள்.

01. ரீமேக்கர் (தேநீர் தயாரிப்போர்)
02. சப்ளையர்
03. ஐஸ்கிறிம் வெட்டுவோர்
04. பொம்பே சுவீற்ஸ் தயாரிப்போர்
05. விற்பனையாளர்
06 காசாளர்

பகுதி பொது முகாமையாளர்
கைத்தொழில் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்.

(சி-9964)

வழ. இல:-50/94
தன்மை:- காணி

தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி
04- 07- 94

வழக்காளி:- விஜயலட்சுமி
சக்திபுரம் எள்ளுக்காடு
உருத்திரபுரம்
எதிர்
எதிராளி:- சுந்தரம் நவரத்தினம்
மே/பா
சுந்தரம் குணராசா
இல:- 167 டீ- 10
திருநெல்வேலி

மேற்படி வழக்கின் வழக்காளி எதிராளிக்கு எதிராக ஒரு காணி வழக்கை இந் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கில் அக்கறையுள்ள எவரேனும் இருப்பின் இவ்வறிவித்தல் கிடைத்த ஒருமாத காலத்திற்குள் இந்நீதி மன்றத்தில் தோன்றி அதற்கான மறுமொழியை கூறுமாறும் தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு வழக்காளி கோரியபடி தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

தயாரித்தவர்
வி. பூமாவதி
வழக்காளி சட்டவாளர்

பதிவாளர்
பதிவாளர் மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

(8871)

வந்ததையிட்டு மக்கள் சற்று பதற்றமடைந்து காணப்பட்டனர்.

மேலும் இதேதினம் நள்ளிரவு 1 40 மணியளவில் காரைநகரிலுள்ள இராணுவ-கடற்படை கூட்டு முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சினை அங்குள்ள ஆயுதப்படையினர் மேற்குறித்த பகுதிகளை நோக்கி மேற்கொண்டனர். இந்த எறிகணைகள் கூடுதலாக மூளாய், பொன்னாலை பகுதி ளில் வீழ்ந்து வெடித்தனஎனத்தெரியவருகிறது (41

## காட்சி உதைபந்தாட்டம்

யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்கும், பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு அணிக்கும் இடையிலான காட்சி உதைபந்தாட்டம் இன்று பி. ப. 4 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும். இக்காட்சி உதைபந்தாட்டத்தில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக பதிவாளர் திரு பரமேஸ்வரன் அவர்கள் கலந்துகொள்வார்.

## சிந்தாந்த பண்டிதர் பரீட்சை முடிவு

சைவ பரிபாலன சபை நடாத்திய சித்தாந்த பிரவேச பாலபண்டிகர் தேர்வில் சித்தியடைந்சோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

சித்தாந்த பிரவேச பண்டிகர் பிரிவில் இரண்டாம் பிரிவில் செல்வி ம. விமலாஞ்சனி, ப. தயாபரசிவம் ஆகியோர் நம் சித்தாந்தபாலபண்டிதர் தேர்வில் மூன்றாம் பிரிவில் திருமதி க. பிரகதீஸ்வரன், திருமதி சு. சிவாகரன் ஆகியோரும், சித்தாந்த பண்டிதர் தேர்வில் இரண்டாம் பிரிவில் செல்வி ச. யோகேஸ்வரி, செல்வி ச. காந்திமதி ஆகியோரும் சித்தி பெற்றுள்ளனர்.

தமிழீழ மண்ணில்:- 21. 07. 1991

கட்டைக் காட்டிலே ஒரு காவியம் படைத்தாய்
அந்த வெட்டவெளி போரிலே வீரனாய் திகழ்ந்தாய்
கண்ணெதிரே பகைவனின் படையினை மண்டியிட
-வைத்தாய்
இந்த மண்ணின் மகிமை சொல்ல நீ ஒரு மாவீர
-னானாய்

·சக போராளி நண்பர்கள்.

(8881)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு:
19 - 03 - 1966

உதிர்வு:
23 - 06 - 1994

### அழகதுரை குணசீலன்

எமது குலக்கொழுந்து அழகதுரை குணசீலன் (கண்ணன்) அவர்கள் பிரான்சிய நாட்டில் மறைவெய்தினராகச் செய்தியறிந்து எமது துயரிற் பங்கேற்றோர்க்கும், எம்மைத் தேற்றியோர்க்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும் நன்றி நவில்வதுடன், 23 - 7 - 94 சனிக்கிழமை அன்று அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் பங்கேற்று அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
க. அழகதுரை
குடும்பத்தினர்

கெருடாவில் கிழக்கு,
கொம்மந்துறை
வல்வெட்டித்துறை. (8878)

பன்குளம்-திருமலை)

**லெப் கருணா** (நடராசா குகேந்திரன்-வெடிவைத்தகல், நெடுங்கேணி-மணலாறு)

**லெப்.குணா** (வன்னியசிங்கம் புஸ்பராசா-புதுக்குடியிருப்பு-மணலாறு)

**அலெக்ஸ்** (முருகையா சந்திரகாந்தன் - புதுக்குடியிருப்பு-மணலாறு)

**கப்டன் தாஸன்** (பாலசுந்தரம் முரளீதரன் - தண்ணீரூற்று, முள்ளியவளை-முல்லைத்தீவு)

**லெப்.காண்டி** (கனகரத்தினம் கனகேஸ்வரன்-துணுக்காய், மாங்குளம்-முல்லைத்தீவு)

**மேஜர் சிவசங்கர்** (யோசப் ஜெயமணி-கோதண்டர், நொச்சிக்குளம்-வவுனியா)

**கப்டன் விஷ்ணு** (யோசப் செல்லையா தியாகு-செட்டிக்குளம் வீதி, பெரியகட்டு-வவுனியா)

**சந்திரா** (மல்லிகா பொன்ராசா-மகிழம்பைக்குளம்-வவுனியா)

**நசார்** (பியதாச ரவி மன்னார் வீதி, செட்டிக்குளம்-வவுனியா)

**கபூர்** (தங்கவேல் நடேசன்-155-ம் சட்டை, பாரதிபுரம்-கிளிநொச்சி)

**டொமினிக்** (அருள் ஆனந்தராசா-திருவையாறு-கிளிநொச்சி)

**மேஜர் சேரன்** (சண்முகம் றோய்-செழியன்-றாகம-கொழும்பு)

**மேஜர் கோணேஷ்** (மார்க்கண்டு தாமோதரம்பிள்ளை -புத்தூர் மேற்கு-யாழ்)

**கப்டன் பில்லா** (கிருஷ்ணபிள்ளை சிவஞானம்-உடுத்துறை-தாளையடி-யாழ்)

**லெப்.இளஞ்செழியன்-வாஞ்சி** (மு. வே. யோகேஸ்வரன் அரவிந்தன்-மயிலியதனை, தொண்டமானாறு-யாழ்)

**லெப்.வாசன்** (சிங்கராசா பிலிப்நிக்சன் - குருநகர்-யாழ்)

**2-ம் லெப்.கந்தன்** (அன்ரன் ஜேசுதாஸ் அன்ரன் மரியதாஸ்-3-ம்குறுக்குத்தெரு-பருத்தித்துறை)

**2 ம் லெப்.தேவா** (அற்புதநாதன் குகதாஸ்-குப்பிளான், ஏழாலை-யாழ்)

**2-ம் லெப்.குயிலன்** (துரைராஜா ரசிகரன்-கொம்மாந்துறை-வல்வெட்டித்துறை)

**சந்திரநாயகி** (சிவமலர் வடிவேலு-கிளாலி, எழுதுமட்டுவாள்-பளை)

**அயுர்தன்** (பொன்னுத்துரை மோகரன்- நாவற்குழி தெற்கு. கைதடி-யாழ்)

**வரன்** (சரவணமுத்து ரவிச்சந்திரன்-மானிப்பாய்வீதி, கோணாந்தோட்டம்-யாழ்)

**சிவா** (சிவராசா ஜெகதீஸ்வரன்-பொற்கலன் தம்பை. தெல்லிப்பழை-யாழ்)

**சுடரோன்** (நடராசா ஜெகதீஸ்வரன்- கருகம்பனை, கீரிமலை-யாழ்)

**ஆனந்த்** (கிருஷ்ணபிள்ளை தவராசா-கரவெட்டி கிழக்கு-யாழ்)

**பிலிப்ஸ்** (செபஸ்ரியன் ரொக்சன்-தொடர்மாடி, குருநகர்-யாழ்)

**ஆனந்தன்** (நேசா அமலதாஸ்-றக்கா வீதி, சுண்டுக்குளி-யாழ்)

**முரளி** (மகாலிங்கம் தவக்குமார்- 5-ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு-யாழ்)

**குசோக்/கிசோக** (தியாகராசா கிருபாகரன்-மாவிட்டபுரம்-தெல்லிப்பளை-யாழ்)

**ரசிந்தன்** (வெற்றிவேல் வரதராசா - கிளானை, தெல்லிப்பழை-யாழ்)

**லோலோ** (தில்லைநாதன் முரளிதரன்-புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம்-யாழ்)

**முரளி** (இராசதுரை தர்மசீலன்- சுழிபுரம் மேற்கு, யாழ்)

**பில்லா** (குருகன் முத்தையா நந்தபாலன்-செல்வபுரம், உரும்பராய் தெற்கு-யாழ்)

**நளினி** (மேகலா இரத்தினராசா - பலாலி வீதி, உரும்பராய் வடக்கு யாழ்)

**நிசாந்தன்** [இராசதுரை நந்தகுமார், ஞானவைரவர் வீதி, உரும்பராய்கிழக்கு-யாழ்]

**கபிலன்** (மார்க்கண்டு குகமூர்த்தி- நவாலி தெற்கு. மானிப்பாய்- யாழ்)

**ரவி** (கனகசபை ரவீந்திரன்-புத்தூர் கிழக்கு - யாழ்)

**றெஜி** (பற்குணராசா செந்தூரன்-டச்சு வீதி, மானிப்பாய்-யாழ்)

**அன்ரனி** (வல்லிபுரம் பிரதாபன்-புதியசெம்மணிவீதி, ஆனந்தபுரம், கல்வியங்காடு - யாழ்)

மட்டு - தாண்டவன் வெளியில் எதிர்பாராதவிதமாக பொறிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த.

**புனிதன்** (லியோ புனிதராஜ் - பாரதி ஒழுங்கை-மட்டு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ்விவசாயி, 1992-ம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் மாரடைப்பு நோய் காரணமாக எமைப்பிரிந்த,

**சபாபதி - தயாநிதி** (சின்னத்தம்பி குகேந்திரன்-கிரான்- மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-9958]

## கொழும்புமாவட்ட பிரசாரம் சிறிசேன கூரே பொறுப்பில்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தேர்தல் பிரசாரத்துக்காக, அமைச்சர் சிறிசேன கூரே நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை ஐ. தே. கவின் தேர்தல் நடவடிக்கைகளுக்கான செயற்பாட்டுத் திட்டங்கள் கொழும்பு நகரின் பெரும் வியாபாரப் புள்ளிகளிடம் வழங்கப்பட்டுள்ளன. இதன் ஒரு படியாக, சுவரொட்டிகள், பதாகைகள் அமைக்கும் பொறுப்பு கொழும்பு நகரிலுள்ள ஓர் அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை முகவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## சொத்திஉபாலி, சோமேயை இடம் மாற்றக் கோரிக்கை

(கொழும்பு)

பாதாள உலக கிரிமினல்களான சொத்தி உபாலி, டட்ட (மொட்டை) சோமே ஆகியோரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் எனவே அவர்களை வேறு விளக்கமறியலுக்கு மாற்றுமாறு அவர்களின் சட்டத்தரணி நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது மஹர விளக்கமறியலில் வைத்திருக்கும் இருவருக்கும் இவர்களால் கொலைசெய்ததாக கூறப்படும் நால்வரின் சகாக்கள் கொலை செய்வதற்கு முயற்சி மேற்கொள்வதாகவும்எனவே இதனை கருத்தில் கொண்டு வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுமாறுசட்டத்தரணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## விபரங்களற்ற மென்பானம் விற்பனைக்கு விடக்கூடாது

-தொழிற்றுறை நிறுவனம் எச்சரிக்கை

ஏற்கனவே விடுக்கப்பட்ட எச்சரிக்கையையும்மீறி விபரங்கள் அற்ற மென்பானங்களை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

சந்தைப்படுத்தப்படும் அனைத்து மென்பான வகைகளின் சுட்டுத்துண்டுகளில் அவ்வகை மென்பானங்களின் உள்ளீடுகள் உற்பத்தித்திகதி பாவனைக்கான இறுதித்திகதி முதலியன குறிக்கப்பட வேண்டுமென கடந்த காலத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் கடந்த சில தினங்களாக தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட திடீர்பரிசோதனையிலே இவ்வாறு விபரங்கள் இல்லாத சுட்டுத்துண்டுகளைக் கொண்ட மென்பானங்கள் சந்தைப்படுத்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனவேஇவ்வாறானஎச்சரிக்கைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இப்படியான உற்பத்திகள் சந்தைப்படுத்தப்படுவதை அவதானிக்கும் பொதுமக்கள் இது குறித்துத் தகவல் தருமாறும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## ராஜதந்திர சேவை நியமனம் வெளியுறவாளர் அதிருப்தி

வெளியுறவுத் துறையில், இராஜதந்திர அனுபவமற்ற வகையில், அரசியல் வாதிகள் நியமனங்களை செய்து வருவதாக இலங்கை வெளியிறவு சேவையாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை தூதரகங்கள் ஆளும் கட்சி அரசியல் வாதிகளது, உறவினர்கள், இளைப்பாறிய பாதுகாப்பு படையினர் பொலிஸ்உயரதிகாரிகள், மற்றும் சக்திவாய்ந்த அரசியல்வாதிகளது நண்பர்களால் நிறைக்கப்பட்டுள்ளதாக தொழில்ரீதியான இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் குறைகூறி உள்ளனர்.

## தொழில்நுட்ப அதிகாரிகள்

# யாழ். மத்திய கல்லூரி 175-வது ஆண்டை நிறைவுசெய்கிறது

பாழ்ப்பாண மண்ணில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடங்களில் யாழ் மத்திய கல்லூரியும் ஒன்றாகும். எமது கல்லூரி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதனைக் கண்டுபிடிக்கப் பழைய மாணவர் சங்கத்தினால் அமைக்கப்பட்ட குழுவில் மாவட்ட நீதியரசர் திரு. க. கதிரவேற்பிள்ளை, யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. சிற்றம்பலம் (Ph D) மெதடிஸ்ற் திருச்சபை உறுப்பினர் வண A. W ஜெபநேசன் ஆகியோர் அங்கம் வகித்தனர். பல ஆவணங்களையும், வரலாறுகளையும் ஆராய்ந்து யாழ் மத்திய கல்லூரி 1816-ம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. (1816-08-01) என சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்தனர்.

இற்றைக்கு 175 ஆண்டு காலச் சரித்திரத்தில் பல பெரியார்களையும், கல்விமான்களையும், வைத்திய நிபுணர்களையும், பொறியியலாளர்களையும், ஆசிரியர்களையும், கலைஞர்களையும்,பத்திரிகையாளர்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கி இந்த மண்ணிற்கும், மக்களுக்கும்,உலகிற்கும் தந்திருக்கின்றது. 1816-08-01 இல் ஜேம்ஸ் லிஞ்ச் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு 1869இல் பட்டப் பரீட்சைகளுக்காக யாழ் மத்திய பாடசாலை சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என தரமுயர்த்தப் பெற்றது.

1870இல் டி. பி. நயில்ஸ் என்பவரே அதிபர் பொறுப்புக்களை ஏற்ற முதற் தமிழராவர். தனித்துவமானதும் முதன்மையானதுமான பங்களிப்பினை எமது சமூகத்திற்கு நல்கிய பதின்மரைப் பற்றிக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும். ஆங்கிலப் பாடசாலையை யாழ் மத்திய பாடசாலையாகத் தரமுயர்த்தியவர் வண டாக்டர் பீற்றர் பேர்சிவலாவார்.சைவத் தமிழறிஞர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவ நாவலர் எமது பழைய மாணவரும் ஆசிரியருமாவார். பழைய அதிபர் பிறட்றிக் வெப்ஸ்ரர் யாழ்ப்பாணத்திற்கு முதன்முதலில் துடுப்பாட்டத்தை Cricket) அறிமுகப்படுத்தினார். யாழ். மண்ணிற்கு உதைபந்தாட்டத்தை (Football) 1894இல் அறிமுகப்படுத்தியவரும் கல்லூரியின் பழைய அதிபரான கேப்ரியல் லீஸ் ஆவார். இந்த ஆண்டு உதைபந்தாட்டத்தின் நூறாவது ஆண்டாகும் இந்த பெருமையும் யாழ் மத்திய கல்லூரிக்கே சாரும் உலகத் திருச்சபையிலே உன்னத இடத்தை வகித்த முதற் தமிழர் எமது பழைய மாணவர்- ஆசிரியர், அதிபர் வண டாக்டர் டிரி நயில்ஸ். இந்த நாட்டில் ஆசிரியத் தொழில் உயர்ச்சி பெறுவதற்கு தொழிற்சங்க ரீதியில் உழைத்தவர் எமது பழைய மாணவர் -ஆசிரியர் - அதிபர் ஏ ஈ தம்பராவார்- யாழ்ப்பாணத்தில் சேக்ஸ்பியர் நாடக அரங்கியல் வல்லுநராய் திகழ்ந்தவர் எமது பழைய மாணவர் - ஆசிரியர் - உப அதிபர் - பதிலதிபர் ஜே சி சார்ள்ஸ் ஆவார்-இலங்கையின்சார்பில் 1952-ல் ஹெல்சிங்கியில் ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொண்ட முதல்மாணவனும், தமிழரும் இருபது வயது கொண்ட என் எதிர்வீரசிங்கமாவார்- ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற முதற்தமிழரும்இவரே

மேலும் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் மனந்தளராது கடமை புரியும் யாழ் போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ் சிவகுமாரன், கண்சிகிச்சை நிபுணர் எஸ் குகதாசன், யாழ் பல்கலைக்கழக பொறியியல் பேராசிரியர் வி நவரட்ணராஜா,

**டாக்டர்**

**எஸ்.பி.ஆர் சீர்மாறன்**

மற்றும் அரச அதிபர் காமாணிக்கவாசகர், தபாலதிபர் சேதுகாவலர், ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ்- சோதிலிங்கம், கல்லூரி அதிபர் கவிஞர் என்- கே- சண்முகநாதபிள்ளை, பிரபல கிரிக்கற் வீரர் வி- கே- சண்முகலிங்கம் ஆகியோரும் எமது மத்தியின் மணிகளே!

இந்தக் கல்லூரி இன்னும் பல கல்விமான்களையும், தேசப் பற்றாளர்களையும், வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், ஆசிரியர்களையும், கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கி இந்த மண்ணிற்குத் தர வேண்டும் என்பது தான் இங்குள்ள எமது மக்களின் பேரவாவாகும்.

## தேர்தல் நியமனத்திற்கு வர அலுவலகவாகனம் பாவிப்பு

-எதிரணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான சரத் அமுனுகம தான் பதவி வகிக்கும் ''லேக் ஹவுஸ்'' நிறுவனத்திற்கு சொந்தமான 17-036 வாகனத்தில் சென்று தனது நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளார் என எதிரணியினரால்தேர்தல் ஆணையாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஐ. தே. கவின் சார்பில் போட்டியிடும் அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதே போல் தேர்தல் நடவடிக்கைகளுக்காகஅரச சலுகைகளைப் பெற்று வருவதாக ஏற்கனவே பல புகார்கள் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நங்கூரம்

## ராணுவ மருத்துவமனைக்கு நவீன சிகிச்சைக் கருவிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்தினால் காயம் அடையும் சிறிலங்கா பாதுகாப்பு படையை சேர்ந்தவர்களுக்கு துரித மருத்துவ சிகிச்சை அளிக்கும் நோக்குடன் நவீன ரக இயந்திரங்கள் ... சாலைகளுக்குப் பெறப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ் இயந்திரங்களை இரு வர்த்தகர்கள் நன்கொடையாக தமக்கு கொடுத்து உதவியதாகவும் அவர் சுட்டிக்காட்டி...

## மீண்டும் ஐ. தே. கவில் சேர லலித் விரும்பவில்லை

-சிறிமானி

கட்சியின் கொள்கைகளில் மாறுதல் ஏற்படுத்தவே லலித் விரும்பினார். அதனைக் கட்சித் தலைமை விரும்பவில்லை. இதனாலேயே அவர் ஐ. தே. கவிலிருந்து விலக்கப்பட்டார். இதில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் விருப்பம் மட்டுமன்றி ஐ. தே. கவின் செயற்குழுவும் சம்பந்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமரர் லலித் அத்துலத் முதலியின் பாரியார் திருமதி சிறிமானி தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், லலித் ஐ. தே. கவிற்கு மீண்டும் திரும்பும் எண்ணத்தை எப்போதும் கொண்டிருக்கவில்லை. ஐ. தே. கவின் கொள்கைகள் தவறானவை என்று முடிவெடுத்தே மாற்றம் கொண்டுவர முயற்சித்தார்.

லலித் தன்னை நம்பிய மக்களை ஒருபோதும் கைவிட்டதில்லை. லலித்தை ஆதரித்த மக்கள் தம்மையும் ஆதரிப்பார்கள் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் வடிவேலு தம்பையா

| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 08-07-1911 | 21-06-1994 |

அன்பின் சோதியே பாசத்தின் பிறப்பிடமே
உங்கள் ஆசைமுகம் மறைந்து முப்பத்தொருநாள்
போனாலும் இன்பமாய் நாம் வாழ்ந்த காலத்தை
நினைத்து மறக்க முடியாமல் தவிக்கின்றோம்
எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று
இறுதிவரை எம்மைகாத்துநின்ற எங்கள் தெய்வமே
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து சென்றாலும் உங்கள்
நினைவு என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாது.

ரஞ்சித இல்லம்,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்.

(8857)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



# தொழில்நுட்ப அதிகாரிகள்
## சம்பளம் உயர்த்தப்படும்

(கொழும்பு)

நடுத்தர மட்டத்திலுள்ள தொழிநுட்ப அதிகாரிகளின் சம்பளங்கள் மாற்றியமைக்கப் படுமென, ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். சம்பளங்கள், ஆளணிகள் சம்பந்தமான குழுவின் சிபாரிசுக்கமைய இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தரம் 2A, தரம்2B, தரம்1, விசேட தரம் ஆகியவற்றின் சம்பளங்கள் வருடம் ஒன்றுக்கு 40,380 ரூபா விலிருந்து 64,800 ரூபாவரை இருக்கும்.

பல்வேறு திணைக்களங்களின் தேவைகளை பரிசீலனை செய்வதன் மூலம் இது நிர்ணயிக்கப்படும். அதேசமயம் 92-ம் ஆண்டின் பொதுநிர்வாக சுற்றறிக்கை மூலம் எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்த சேவைகளை சேர்ந்தோருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிவாரணம் நடுத்தர மட்ட தொழிநுட்ப சேவையின் தரம் 2A அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இச்சம்பள சீரமைப்பு இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் எனவும் தெரிய வருகிறது.

# அம்பாறை மாவட்டத்தில்
## 59,115 தமிழ் வாக்குகள்

அம்பாறை மாவட்டத்தில் 3, 12, 006 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாக்காளர் பட்டியலின்படி 1, 26, 496 சிங்களவர்களும், 1, 25 ,987 முஸ்லிம்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மூன்றாம் நிலையே தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. 59, 115 வாக்காளர்களே தமிழ் வாக்காளர்களாக தகுதிபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொத்துவில் தொகுதியில், 97, 721 பேரும், அம்பாறை பிரிவு-2-இல் 66, 192 பேரும், சம்மாந்துறையில் 51, 991, கல்முனையில் 50,248, அம்பாறை தொகுதி-2-இல் 45, 854 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.


## அராலி கரைப்பிட்டி விநாயகர்
# தேர்த்திருவிழா
### இன்று காலை ೮. 00 மணி

தேரேறி வருகின்ற கரைப்பிட்டி விநாயகனின் திருத்தாள் பணிவோர்க்கு உரைக்கின்ற விக்கினங்கள் என்றும் உண்டாகாமே.

ஸ்ரூடியோ நீத்ய சித்ரா,
சங்கானை.

(8877)


போல் தேர்தல் நடவடிக்கைக

## நங்கூரம்
### வெளிவந்துள்ளது

நங்கூரம் ஆடி-மாத இதழ் வெளிவந்துள்ளது. ஓவியர் தயாவுடனான நேர்காணல், எயிட்ஸ், பட்டதாரிகள்-நடுப்பக்கம், இலட்சியம் எதுவரை, மறதிக்கு மருந்து ஆகிய அம்சங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

## சான்றிதழ்வழங்கலும்
## நிறைவு விழாவும்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதங்களாக இடம்பெற்று வந்த உடற்கல்வியும் விளையாட்டுகளும் எனும் அடிப்படைக் கற்கைநெறியின் நிறைவுவிழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்எதிர்வரும்ஞாயிறு பி.ப. 3 மணிக்கு புவியியற் றுறை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

புறநிலைப்படிப்புகள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரன் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள மேற்படி வைபவத்தில் சான்றிதழ்களை கலைபீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார், திருவாளர்கள் சி. எஸ். அருள்பிரகாசம், தி. அருணகிரிராஜா, தியாகராஜா, யதுர்குலசிங் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

## அறிவுக்களஞ்சியம்
## வெளிவந்துள்ளது

அறிவுக் களஞ்சியம், 24வது இதழ் வெளிவந்துள்ளது. வியாழனுடன் மோதவிருக்கும் எரிநட்சத்திரங்கள், கிருஷ்ணனின் துவாரகை உண்மையில் இருந்ததா, தாவரங்களுக்கு உணர்வு உண்டா, அமேசன் நதி, பெண் போராளிகள்,தெரிந்துகொள்வோம். நோபல் பரிசுபெற்ற கவியரசு தாகூர், கடல்வழிச் சுரங்கம் போன்ற அம்சங்கள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

சேர்ந்தவர்களுக்கு துரித மருத்துவ சிகிச்சை அளிக்கும் நோக்குடன் நவீன ரக இயந்திரங்கள் இராணுவ வைத்திய

வர்த்தகர்கள் நன்கொடையாக தமக்கு கொடுத்து உதவியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். இக்பால்
### (நாகலிங்கம் கிருஸ்ணகுமார்)
திருகோணமலை

ஈழத்தில் முத்தாய் **22-05-1972** — தமிழீழத்தில் வித்தாய் **21-07-1991**

அன்னியரை விரட்ட ஆனையிறவு சென்றாயே-மகனே
என் அடிவயிறு நோக உன் ஆற்றல்தனைக்
காட்டினாய்
இக்பால் எனும் பெயர் தாங்கி அப்பால் சென்றாயே
மாவீரனாகினாய் மகத்துவந்தான்-ஆனால்
மாறாத எம் சோகம் தீராததுதான்
கிருஸ்ணனை நினைத்துத்தான் பெயர் சூட்டினேன்
- ஆனால்
நீயே போர்க்களம் போவாய் என்று நான்
நினைக்கவில்லையடா
தமிழன்னையின் விலங்கொடிக்க தரணியிலே
வந்துதித்தவனே
நீ மறைந்து ஆண்டுகள் மூன்றாகின ஆனால்
உன் நினைவுமட்டும் நேற்றிருந்தாய் என நவில்கிறது

நா.மருது
உரும்பிராய்
கிழக்கு.

(8869)

பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்கள்
நண்பர்கள்



செல்வி
## யமுனா கனகசுந்தரம் (சுமி)

(முன்னாள் டிறிபேக் கல்லூரி மாணவியும் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய 94-ம் ஆண்டு 2-ம் வருட உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவியுமாவார்.)

**மலர்வு:- 1973-07-12 உதிர்வு:- 1994-06-07**

அன்பின் செல்வமகளே 'சுமி அம்மா'
ஆருயிர் பெறாமகளே அருமைச் சோதரியே
தூணாய் நீ இருப்பாயென்று
துணிவாய் நாம் நின்றோம் - அம்மா
தூண் நீ சரிந்திடவே
துயரத்தில் மூழ்கித் தவிக்கின்றோம் - அம்மா
படிப்புத் தான் என் எதிர்காலம்
என்று சொல்லி... நீ
பள்ளி சென்ற போதெல்லாம்
பட்டங்கள் பல பெற்று - நீ
வருவாய் என்று.........
பாசத்தோடு நாம் காத்திருந்தோம்- அம்மா
ஆனால்... நீயோ... எம்மை ஏமாற்றி
உற்ற நண்பியின் இழப்பினைத் தாங்காது
உன் உயிரை விலை கொடுத்தாய்- அம்மா
உள்ள உறவின் பாசங்களை
மறந்து செல்ல எப்படித்தான்
மனம் கொண்டாயோ - மகளே

ஜோய் கொட்,
கென்ஸ்மன் லேன்,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

உன் பிரிவால் வாடும்
அம்மா, மம்மி, சகோதர,
சகோதரிகள், மாமன்மார்,
மாமிமார், மைத்துணன்,
மைத்துணிமார், மக்கள்,
மருமக்கள்.

(8872)

நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

# வெளிநாடு செல்ல தயாராகும் அமைச்சர்கள்

(கொழும்பு)
பொதுத் தேர்தல் நெருங்குவதால் அமைச்சர்கள் பலர் வெளிநாடுகளை நோக்கி புறப்படத் தயாராகி வருகின்றனர்.

இவ் அமைச்சர்கள் தமது வெளிநாட்டுப் பயணத்துக்கான ஆரம்ப ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர். தமக்கு வழங்கப்பட்டிருந்த சர்வதேசக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி தமது குடும்பத்தினரை ஏற்கனவே வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அடுத்த கட்டமாக எந்த நேரத்திலும் வெளிநாடுகளுக்குப் பயணமாகும் நிலையில் தம்மைத் தயார்ப் படுத்தும் வேலைகளில் அமைச்சர்கள் இறங்கியுள்ளனர் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ. தே. க விற்காக உழைக்குமாறு

## கிராம சேவையாளர்களுக்கு அமைச்சர் கடிதம்

(கொழும்பு)
தத்தமது பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிக்கு உழைக்குமாறு நாட்டிலுள்ள சகல கிராம சேவையாளருக்கும் அமைச்சர் ஜோன் அமரதுங்கா கடிதம் எழுதியுள்ளார்.

தமது அமைச்சின் கடிதத் தலைப்புமூலம் தனது கையொப்பத்துடன் அனுப்பப்பட்ட இக்கடிதத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் பொதுத் தேர்தலின் போது தத்தம் பகுதிகளுக்கு கிராம சேவையாளர்கள் சென்று ஐ. தே. க விற்கு வாக்களிக்கும் படியும் அவ்வாறு செய்து தமது கட்சிக்கு ஆதரவு வழங்கும் சகல கிராமசேவையாளர்களுக்கும் விசேட படி மற்றும் வசதிகள் எதிர்காலத்தில் செய்து கொடுக்கப்பட இருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தலதா கோபுரங்களுக்கு தங்கமுலாம் பூச பணிப்பு

(கண்டி)
தலதாமாளிகையின் உட்புற கோபுரங்களுக்கு முழுமையாக தங்க முலாம் பூசுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பணிப்புரை வழங்கியுள்ளார்.

அண்மையில் தேர்தல் பிரசாரத்திற்கு முன்னர் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடு செய்தபோது இவ்வாறான பணிப்பை தலதா மாளிகை தியவதனநிலமே நிசங்க விஜயரட்ணாவிற்கு விடுத்தார்.

## தொகுதி ஒவ்வொன்றிற்கும் விசேட ரகசிய பொலிஸ்குழு

(கொழும்பு)
பொதுத் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளை முறியடிக்கும் நோக்கத்துடன் ஒரு குழு திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இக் குழுவின் திட்டத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் விசேடமான இரகசிய பொலிஸ் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு பொலிஸ் தலைமை அலுவலகம் கூறியுள்ளது.

இரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவரைத் தலைவராகக் கொண்டு பத்துப் பொலிசார் இக் குழுவில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## 3 ஆம் ஆண்டு நினைவாக

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் எதிர்வரும் செப்டம்பர் 9, 10, 11 ஆம் திகதிகளில் யாழ். மருத்துவபீட மைதானத்தில் நடத்தவுள்ளது,

18 வயதின் கீழ், 20 வயதின் கீழ் என இரு வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக போட்டிகள் நடைபெறும்.

இப் போட்டிகளுக்கு விண்ணப்பிப்பது தொடர்பான மேல் விபரங்களை யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் விரைவில் அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகள், கழகங்கள் ஆகியவை ஊடாக அல்லது தனிப்பட்ட முறையில் மெய்வல்லுநர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

## குழாய்க் கிணறு

பருத்தித்துறை கோணாந்தீவுப் பகுதியிலுள்ள அச்சோலை பிள்ளையார் கோவிலடியில் குழாய்க்கிணறு ஒன்றை தேச நிர்மாணிகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். இதன்மூலம் அப்பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் பெறுவதில் உள்ள சிரமம் ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது.

அமைக்கப்பட்ட இக் குழாய் கிணறுக்கு கைப்பம்பிகளும் பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

## திருவிழா

சில்லாலை - புனித யாகப்பர் தேவாலய திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு நடைபெறுமென பங்குத் தந்தை அருட்திரு. அ. பெ. பெனற் அடிகள் அறிவித்துள்ளார்.

இன்றுகொடியேற்றமும்சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 7.15மணிக்கு திருநாள் திருப்பலியை அடுத்து திருச்சொரூப பவனியும் நடைபெறும். (21)

## கைதடியில் செற்அப் போட்டி

(யாழ்ப்பாணம்)
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 39-வது ஆண்டு விழாவையொட்டி இன்று வடமாகாண ரீதியிலானசெற் அப் போட்டி நிலைய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நிலையத் தலைவர் திரு.பொன்.செல்வராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டி நிகழ்வில் 16

## சுற்றுநிருபம் காலதாமதம் பலருக்கு வாய்ப்பில்லை

(தொல்புரம்)
பிரதேச மட்டத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்கு அமைவாக கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினால் மேற்கொள்ளப்படவிருந்த ''இளைஞர்களுக்கான கணனி பயிற்சி'' பற்றிய விபரங்கள் அடங்கிய சுற்று நிருபம் காலதாமதமாகி கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்படி கணனி பயிற்சி சம்பந்தமாக பிரதேச மட்டத்திலிருந்து இளைஞர்களிடம் விண்ணப்பம் கோரும் பொருட்டு கொள்கை திட்டமிடல் அமைச்சில் இருந்து கடந்த யூன் மாதம் 17 ஆம் திகதி வலி. தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு அனுப்பியிருந்த கடிதம் இந்த மாதம் 18 ஆம் திகதியே கிடைக்கப் பெற்றுள்ளது.

மேலும் இந்தப்பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவு தினம் 18-07-94 திகதியே ஆகும். இதனால் இந்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க பல இளைஞர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போயுள்ளதென மேற்படி பிரதேச செயலக வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (41)

## 3 ஆம் ஆண்டு நினைவாக



தாயின் மடியில்:
24 - 01 - 1974

தாயக மண்ணில்:
21 - 07 - 1991

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச்சேர்ந்த
**2-ம் லெப். குயிலன்**
**(துரைராசா ரஜீகாந்)**
(கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை)
(கட்டைக்காடு நேரடிச் சமரின்போது வீரச்சாவடைந்தார்)

கட்டைக்காட்டு களமதில் காவியமாகிய எம்
செல்வமே
தலைவன் வழியில் வீரமுடன் வீறுநடை போட்டவனே
எங்கள் நாட்டின் வீரமதை எடுத்துக்காட்டிய
தூயவனே
உன் வழியில் விரைவில் ஈழம் உருவாகும்
பார்த்து மகிழ நீ இல்லையே என இதயமே
துடிக்கிறதே
பிஞ்சிலே முதிர்ச்சி கண்டாய் தமிழ் ஈழமே இறுதி
எனக் கண்டாய்
கானக மெல்லாம் திரிந்து களம் பல கண்டவனே
ரஜி என இனி நாம் யாரை அழைப்பதடா.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

இவரின் 3 -ம் ஆண்டு நினைவுதினம் 21-07-94 (இன்று) இவருடைய வீட்டில் அனுஷ்டிக்கப்படும் இதில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்எல்லோரையும் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

யாழ்ப்பாண றோட், உங்கள் பிரிவால் வாடும்
வீரபத்திரர் கோயிலடி, **குடும்பத்தினர்**

## பொலிஸ் ஜீப்பில் வந்து கி. சேவையாளர் கடத்தல்


(மாத்தளை)
மாத்தளை மாவட்டத்திலுள்ளரத்தோட்டை கிராமத்தில் கிராம சேவையாளராகப் பணியாற்றும் பெண் ஒருவர் பொலிஸ் வாகனத்தில் வந்தோரால் கடத்தப்பட்டார்.

ராஜ வீதியிலுள்ள பஸ் நிலையம் ஒன்றில் வேலைக்கு செல்வதற்காக பஸ்சுக்கு காத்திருந்த சமயத்தில் இக் கடத்தல் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் ஜீப்பில் வந்த மூவர் ''லிப்ட்'' தருவதாக கூறிய போது பெண் கிராம சேவையாளர் அதனை மறுக்கவே அவர் பலவந்தமாகத் தூக்கிச் செல்லப்பட்டார்.

இப் பகுதியில் சட்டவிரோதமாக காட்டு மரங்களை வெட்டி விற்போரே இக் கடத்தலின் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் சேரன்**
(சண்முகம் றோய் செழியன்)

பிறப்பு: 16-11-1969 — வீரச்சாவு: 21-07-1991

அறுகு போல் வீரம் அரும்பி;
ஆல மரமாய் அது வளர்ந்து;
சுதந்திரக் காற்றை நீ விரும்பி;
இதயத்தில் அண்ணனை நீ ஏற்றி;
வரிப்புலி அணியில் நீ நின்று;
எதிர்ப்படை அணியை வென்று;
கட்டைக் காட்டில் ... துட்டரின்......
குண்டை மார்பில் ஏந்தி .. வீரச்சாவு!
விழுதுகள் சிலதும் உன்னுடனே ... !
அழுது ஆற்றலாமா?...எழுத்தில் வடிக்கலாமா?...
இல்லை!

புதிய கைகளில் உனது துப்பாக்கி ... நீ
பதித்த சுவட்டிலே நிமிர்ந்து நிற்பதால்
பூரித்து நிற்கிறோம் ... உன்னை
பூசித்து நிற்கிறோம்.

''சித்ராபதி'' - **நண்பர்கள்**
பழைய பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி. (8850)

## 4-ம்ஆண்டுநினைவலைகள்



போட்டி நிலைய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நிலையத் தலைவர் திரு.பொன்.செல்வராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டி நிகழ்வில் 16 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இவரின் 3-ம் ஆண்டு நினைவுதினம் 21-07-94 (இன்று) இவருடைய வீட்டில் அனுஷ்டிக்கப்படும் இதில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

யாழ்ப்பாண றோட்,<br>வீரபத்திரர் கோயிலடி,<br>உடுப்பிட்டி.

உங்கள் பிரிவால் வாடும்<br>குடும்பத்தினர்

(8863)

## 3 ஆம் ஆண்டு நினைவாக



தாயின் மடியில்<br>16. 02. 1975

தாயக மண்ணில்<br>21. 07. 1991

### கப்டன் பில்லா

(இருஷ்ணபிள்ளை சிவஞானம் (சிவா)<br>வேம்படி றோட், உடுத்துறை

கப்டன் பில்லா காலம் அழைத்ததும்<br>
கனிந்து விதையாகிய வீரமகன்<br>
காலம் அழைத்து முதுகிற் தட்டிய<br>
பெருவீரன் மாவீரன்<br>
புல்லாவெளியில் ஷெல்லா சென்றவன்<br>
பெற்றோர்க்கும் மற்றோர்க்கும்<br>
கொற்ற குடை பிடித்து<br>
அரக்கத்தனத்தை அழிக்க<br>
ஆக்கியவனை அரும் பொருளியவன்<br>
முந்தநாள் கண்டு சிரித்தவன்<br>
நேற்று புலிக்கொடியால் போர்த்துக் கிடந்தவன்<br>
மூன்றாம் ஆண்டு இன்று என்பதை<br>
நம்பலாமா? முடியவில்லை<br>
உனை மறக்க முடிவதுமில்லை<br>
ஏழு ஜென்மமும் உன்னை நினைத்து<br>
கண் துடைத்திடுவோம்.


இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வைபவத்தில் போராளிகளை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பசிட்டி,<br>பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.

(8858)

## 3 ஆம் ஆண்டு நினைவு நாள்





| மேஜர் சேரன்<br>(சண்முகம் றோப் செழியன்)<br>பண்டாரவளை | | மேஜர் லவன்<br>(துரைசிங்கம் ராஜ்சங்கர்)<br>கொழும்பு |
|---|---|---|
| 16- 11- 1969 | < பிறப்பு > | 21- 04- 1968 |
| 21- 7- 1991 | < வீரச்சாவு > | 14- 7- 1991 |


வீரத்தாய் பெற்றெடுத்த<br>
வீர மறவர்களே விடுதலைப்புலிகளே<br>
மேஜர் சேரன் மேஜர் லவன்<br>
தமிழன் படும் கொடுமை கண்டு<br>
பொங்கி எழுந்திட்ட வேங்கைகளே<br>
அண்ணன் பிரபாவின் வழியினிலே<br>
நேராகச் சென்றீர்களோ அது சரியான பாதையடா!<br>
பயிற்சி தனை சிறப்புடனே முடித்திட்டு<br>
பல பல புலிகளை புதிதாக இணைத்திட்டு<br>
கட்டைக்காட்டினிலே எதிரிபடை<br>
ஆயிரம் ஆயிரம் வந்திட்ட போதிலும்<br>
அஞ்சாது வீராவேசத்துடன் போரிட்டு<br>
எதிரியை ஓட வைத்த வேங்கைகளே<br>
மூன்றாண்டு சென்றாலென்ன<br>
முப்பதாண்டு சென்றாலென்ன<br>
உங்கள் கனவு நனவாகும்<br>
விண்ணிலிருந்து நோக்குவீர் மலரும் தமிழீழமதை.

இவர்களுடன் வீரச்சாவடைந்த அனைத்து போராளிகளுக்கும் எமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வித்தியடிப்பிள்ளையார் கோவில் வீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.

- சின்னராஜா குடும்பத்தினர்.

(8853)



### 2-ம் லெப். சபேசன்

(செந்திவடிவேலு ரஞ்சித்குமார்)<br>வல்வெட்டித்துறை

அன்னையின் மடியில்: 12 - 05 - 1972

தமிழீழ மண்ணில்: 05 - 08 - 1990

திதி: 21 - 07 - 94

அன்னியப் படைகளி னாக்கிரமிப்பால்<br>
பொங்கி யெழுந்தாய் புயலாக<br>
அண்ணன் கோபுவின் பாதச் சுவட்டினிலே<br>
அணியோடு நீ நடந்தாய்<br>
கோட்டையிலே குடியிருந்த கொலைகாரக்<br>
கொடியோரை வதம் செய்ய<br>
மின்னலாய் புகுந்து இடியாய் முழங்கி<br>
தாயக மண்ணுக்காய் மரணித்தாய்.

முகவரி:<br>'பொன்னாவில்லா',<br>இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி,<br>வல்வெட்டித்துறை.

தந்தை, தாய்,<br>சகோதரர்கள்,<br>சகோதரி.

(8867)

**சிந்தனைக்கு..**

புதிய கருத்து ஒவ்வொன்றும், அதன் தொடக்க கட்டத்தில் தனி ஒருவர் என்ற சிறுபான்மையில் தான் நிற்கிறது.
- தாமஸ் கார்லைல்.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 21-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


## தமிழீழ அரசமைப்பின் முக்கிய படிக்கல்

தமிழீழ அரசிற்கான கட்டமைப்பைப் படிப்படியாக விடுதலைப்புலிகள் இயக்கம் முன்னெடுத்து வருகின்றது. இந்தவகையில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள காவற்றுறை, நீதி நிர்வாகத்துறை என்பவற்றோடு, தற்பொழுது நிர்வாக சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டது போன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இரு பரிணாமங்களைக் காட்டுவதாகவே உள்ளது. தமிழீழ நிர்வாக சேவை ஆரம்ப வைபவத்தில் பேசிய திரு. அன்ரன் பாலசிங்கம், 'எமது போராட்டம் இரண்டு பரிணாமங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது ஒன்று இம்மண்ணைப் படிப்படியாக மீட்டெடுப்பது அடுத்தது மீட்டெடுத்த பிரதேசத்தில் எமது ஆட்சியைப் படிப்படியாக அமைத்து வருவது' என விடுதலைப் புலிகளின் எதிர்காலத்திட்டத்தையும் வெளியிட்டார்,

இதேசமயம் இவ்விடயத்தில் தலைவர் பிரபாகரனின் குறிக்கோள் என்ன? எவ்வாறான நிர்வாக அமைப்புக்கள் இருக்க வேண்டும்? என அவர் விரும்புகிறார் என்பது பற்றியும் குறிப்பிட்ட திரு அன்ரன் பாலசிங்கம், ''எமது தலைவர் முடிவெடுத்தார், எல்லாத் துறைகளிலும்எமது போராளிகளுக்கும் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். ஒழுக்கமும், நேர்மையும் கட்டுப்பாடும் கண்காணிப்பும் உள்ள இலட்சியப் போராளியின் கண்காணிப்பில் சிவில் நிர்வாக அமைப்பு உருவாக வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

இதேசமயம் தமிழீழப் போராட்டம் இன்னமும் முற்றுப் பெறாத நிலையில், பல்வேறு நெருக்கடிகளை இன்னமும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் வேளையில் இவ்வாறான கட்டமைப்புக்களை உருவாக்குவதில் எத்தகைய பயன்பாடு உள்ளது. இது சிறிலங்கா நிர்வாகத்தை நிறுத்துவதற்கானநடவடிக்கையா? என்பது பற்றி ஒரு தரப்பினரிடம் பலமானதொரு கேள்வி உள்ளமையும் மறுக்க முடியாத ஒன்றே ஆகும்.

இது குறித்தும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெளிவானதொரு பதிலைக் கூறியுள்ளார்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு நவீனபாணியில் புதுவீடு

**- அமைச்சர் தொண்டா வாக்குறுதி**

(கொழும்பு)

2000ஆவது ஆண்டில் தோட்டத் தொழிலாளர் நவீன பாணி வீடுகளில் குடியிருக்க வேண்டும். இதுவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொள்கை எனத் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுரிமை வழங்கும் நிகழ்ச்சியில் அவர் மேலும் தெரிவிக்கையில் எமது மூதாதையர் இந்நாட்டிற்கு 150 வருடங்களுக்கு முன்வந்தனர் அந்நேரத்தில் அவர்கள் இருப்பதற்கு குடிசைகள் கூட இருக்கவில்லை. 50 வருடங்களுக்கு முன் தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

அன்றையநிலை மாறவேண்டும் என்ற கங்கணத்திலேயே இன்று இம்மக்களுக்கு வீட்டுரிமை வழங்கப்படுகின்றது

இன்று நாம் ஏறிய முதல் படி, 10 அடிகாம்பிராக்களில் நாம் வாழ முடியாது அடுத்த படியாக எமது லயன் காம்பிராக்கள் நவீன வீடுகளாக மாற்றப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்

## ஹேமா போட்டியிடாமைக்கு இப்படியும் ஒரு காரணம்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்காவிற்கு கிடைக்கக் கூடிய விருப்பத் தேர்வு வாக்குகள் குறைவடையலாம் என்ற அச்சமே திருமதி ஹேமா பிரேமதாசாவிற்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காமைக்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலில்ஐ தே.க வெற்றி பெற்றால் பிரதமர் பதவிக்கும், தோல்வியுறின் எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கும் பலத்த போட்டி கட்சிக்குள் இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பொதுத் தேர்தலில் கூடிய விருப்புத் தேர்வுகளைப் பெறுவது இப்பதவிகளில் ஒன்றைப் பெற வழிவகுக்கும் என்ற நிலையிலேயே திருமதி ஹேமா தேர்தலில் போட்டியிடுவதை ரணில் விக்கிரமசிங்கா விரும்பவில்லையாம்.

இதே வேளை ஐ தே.கவிற்கு வாக்களிப்போர் முதல் விருப்பத் தேர்வு வாக்கை ரணில் விக்கிரமசிங்க விற்கும், அடுத்த இரு விருப்பத் தேர்வு வாக்குகளையும் முறையே சங்கதாசா, ஒஸி அபயகுணசேகரா ஆகியோருக்கும் வழங்குமாறு அமைச்சர் சிறிசேன கூரே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா வைச் சேர்ந்த மூவர் போட்டியிடுவதால் விருப்பத் தேர்வு வாக்குகளில் தாம் பின்தங்க நேரலாம் என்பதாலேயே காமினி திசாநாயக்கா கண்டி மாவட்டத்தில் போட்டியிடுவதாகவும் கூறப்படுகிறது. கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் ஐ தே.க வேட்பாளர்கள் பலரும் விருப்பத் தேர்வு வாக்குகளில் ஒன்றை காமினிக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## நைஜீரிய ஜனாதிபதி விடுதலை செய்யப்படலாம்?

(லாவோஸ்)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அபியோலாவை விடுதலை செய்யுமபடி, நைஜீரிய தொழிற் சங்கங்களின் கோரிக்கையை பரிசீலனை செய்ய நைஜீரிய இராணுவ அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அபியோலாவை ஆதரித்து, எண்ணெய் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் நாட்டின் எரிபொருள் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் முதல் அபியோலா உட்பட நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையில், நைஜீரியாவைச் சேர்ந்தவரும், காமன்வெல்த் பொதுக் காரியதரிசியுமான எமெகா அணியோடு தனது நாட்டுக்கு வந்து, அபியோலாவையும், இராணுவத் தலைவர் அபாச்சாவையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

## இஸ்ரேல் அமைச்சர் பெரஸ்

## பிரயோகஎந்திரப் பொறியியல்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் பிரயோக எந்திரப் பொறியியல் பற்றிய ஓர் அடிப்படைக் கற்கை நெறி எதிர் வரும் 23 ம் திகதி சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வார இறுதிநாட்களில் இரு மாத காலம் இடம்பெறவுள்ள இக்கற்கைநெறியில் பங்குபற்ற ஆர்வம் உள்ளோர் வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக புறநிலைப் படிப்புகள் அலகில் பதிவு செய்து கொள்ளலாமென இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

## தேர்த் திருவிழா

அராலி தெற்கு கரைப்பிட்டி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்

## ஆர்ஜென்டீனா வெடிகுண்டு ஈரானே பின்னணியில்

**- இஸ்ரேல் குற்றச்சாட்டு**

(புவனசயர்ஸ்)

ஆர்ஜென்டீனாவில், யூதர்களின் சமுதாய மையமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு ஈரானியர் ஆதரவிலான இஸ்லாமியத் தீவிரவாதிகள்தான் காரணம் என இஸ்ரேலிய பிரதமர் யிற்சாக் ரபீன் குற்றம் சாட்டியுள்ளார். இக்குண்டு ... பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால், தெஹ்ரான் வானொலியோ இச்சம்பவத்தில் ஈரான் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதைக் கண்டித்துள்ளது. அரசியல் நோக்கங்களுக்காக இஸ்ரேல் இந்தப் பிரசாரத்தை நடாத்தி வருவதாகவும் ஈரான்

## பிரேமதாசாவின் குடும்பம் எவருக்கும் ஆதரவளிக்காது

**-ஐலண்ட் தெரிவிப்பு**

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் குடும்பத்தினர் எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஐ.தே.கவை ஆதரிக்க மாட்டார்கள். அதேவேளை எதிரணிக்காக வாக்கு தேடவும் முற்படமாட்டார்கள் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியின் குடும்பத்தினருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருவதாக ஐலண்ட் பத்திரிகை கூறியுள்ளது.

தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவதை திருமதி ஹேமா எதிர்த்து இருக்காத போதும் 'நீங்கள் எனக்கு உதவாவிட்டால் நான் ஏன் உங்களுக்கு உதவ வேண்டும்' என்று அவர் எழுப்பிய கேள்வி ஆர்வமுடைய தரப்பினால் தவறாக அர்த்தப்படுத்தப் பட்டதே தேசிய பட்டியலில் அவரது பெயர் விடுபடுவதற்குக் காரணமாகியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

முன்னாள் முதற்பெண்மணிக்கு இப்போது விரல் விட்டு எண்ணக்கூடிய சிறிய தொகையான நிராயுதபாணிகளான பொலிசாரே பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

## குற்றச்சாட்டை நிரூபித்தால் அரசியலிலிருந்து விலகல்

**-தினேஷுக்கு அஷ்ரப் சவால்**

வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைக்க பொதுஜன ஐக்கிய முன்னணி இணங்கியுள்ளது என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா பகிரங்கப்படுத்தினால் அரசியலிலிருந்து ஓய்வு பெற தயாராயிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

விரைவில், சந்திரிகாவுடனான உடன் படிக்கையையும் வெளியிட இருப்பதாக கூறிய அவர், தினேஷ்குணவர்த்தனா நிரூபிக்கத்தவறும் பட்சத்தில், பாராளுமன்றப் போட்டியிலிருந்து வாபஸ் பெறவும், அரசியலில் இருந்து ஓய்வு பெறவும் சவாலுக்கு வருவாரா எனவும் கேள்வி எழுப்பினார்.

## சுதந்திரமாக செயற்படும் வாய்ப்பு இப்போது இல்லை

**-முற்போக்கு முன்னணி தெரிவிப்பு**

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் சுதந்திரமாக செயலாற்ற முடியாதிருப்பதாக இலங்கை முற்போக்கு முன்னணியுடன் இணைந்து செயற்படும். தேசத்தை மீட்கும் முன்னணி மக்களுக்கும், சர்வதேச தலைவர்களுக்கும் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அரசியல் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. ஆளும் கட்சியில் ஆயுதமேந்தியவர்கள் நிராயுதபாணிகளாக்கப்படவில்லை, எனவே மக்கள் முன்தோன்ற வேண்டாம் என கட்சி எம்மை பணித்துள்ளது.

எனவே, அவசரகால சட்டத்தை நீக்கி, அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஆட்சியாளர்களை மக்கள் நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் அம்முன்னணி தன் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளது.

## நிவாரண பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான யூன் மாத முதல் இரண்டு வார நிவாரண உலர்

இது குறித்தும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெளிவானதொரு பதிலைக் கூறியுள்ளார். ''இந்த நிர்வாக அமைப்பில்- சிறிலங்காவின் நிர்வாக அமைப்பில்- எந்த குழப்பத்தையும் நாங்கள் ஏற்படுத்த விரும்பவில்லை ..அதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு நுட்பமான ஆட்சி அமைப்பை உருவாக்கி வருகின்றது .., இது படிப்படியாக எமது நிர்வாக அமைப்புக்களை விஸ்தரிப்புச் செய்து எங்களால் முடிந்த அளவு எமது மண்ணில் ஒரு சிவில் நிர்வாகக் கட்டமைப்பை பலப்படுத்திச் செல்வதே எமது நோக்கமாகும்'' என விளக்கம் அளித்துள்ளார்.

இந்த வகையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இந்நடவடிக்கையானது ஒரு நீண்டகால அடிப்படைத் திட்டத்தினாலானது இது ஒரு தனியரசை உருவாக்குவதற்கும், அதை நிர்வகிப்பதற்குமான அமைப்புக்களையும், பயிற்சிகளையும் வழங்கும் நோக்கம் கொண்டது என்பதே உண்மையாகும்.

இதனைச் சிலர் எண்ணுவது போன்று ஆயுதப் போராட்டம் இறுதியின் எல்லையைத் தொடும் வரை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு பார்த்துக் கொண்டிருப்பின் ஆயுதப் போராட்டம் வெற்றி பெற்று தமிழீழ தனியரசொன்று உருவாகும் போது அதை நிர்வகிப்பதற்கு அமைப்புக்களோ, அன்றி பயிற்சி பெற்ற நிர்வாகிகளோ இருக்கமாட்டார்கள்,

இதேசமயம் அரசுகள் பூரணமாக உருவாவதற்கு முன்னர் மாதிரி நிர்வாக அமைப்புக்கள் உருவாக்கப்படுவது விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதுமையான தொன்றல்ல. பாலஸ்தீன விடுதலை இயக்கம் ரியூனியசின் தலைநகரமான ரியூனிசில் தனது பாராளுமன்றத்தை அமைத்திருந்தது. அதேபோன்று நமீபியாப் போராளிகள் தமது அரச நிர்வாக மாதிரியை சாம்பியாவின் தலைநகரான லுசாக்காவில் அமைத்துப் பயிற்சி பெற்றனர். இதேபோன்று ஆப்கானில் தாலிபரும் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில்தமது அமைச்சரவையை அமைத்திருந்தனர்.

இவ்வாறாக ஆட்சி கைக்கு எட்டும் முன்னரே அரசிற்கான அமைப்புக்களை வெளிநாடுகளில் போராளி அமைப்புக்கள் உருவாக்கி இருந்தன. ஆயினும் இவை யாவற்றிலும் விட சிறப்பம்சம் என்னவென்றால் தமிழீழ நிர்வாக அமைப்புக்கள் சொந்த மண்ணிலேயேவிடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டு வருவதாகும். அதாவது எமது அரச கட்டுமானப்பணிகள் எமது மண்ணிலேயே எம்மாலேயே உருவாக்கப்பட்டு வருகின்றதென்பதாகும்.

இந்தவகையில் தமிழீழ அரசிற்கானஅத்திவாரத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் மிகவும் உறுதியாகவே இட்டு வருகின்றது என்று கூறுவது மிகையல்ல. இது தலைவர் பிரபாகரனின் முழுமையான விருப்பத்தின்படியே நிறைவேறும் பட்சத்தில், தமிழீழ மக்களின் நலனில் பூரண அக்கறை கொண்ட ஒரு நிர்வாக சேவையாக மிளிரும் என்பதில் சந்தேகமில்லை,

# இஸ்ரேல் அமைச்சர் பெரஸ் ஜோர்தானுக்கு விஜயம்

(அம்மான்)

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸ், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயமொன்றை ஜோர்தானுக்கு மேற்கொண்டார் இஸ்ரேலை அயல்நாடான ஜோர்தான் அங்கீகரிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

ஜோர்தானுக்கு பகிரங்கமாக விஜயம் செய்யும் முதலாவது தலைவராக ஷிமோன் பெரஸ் விளங்குகின்றார் இவரே பத்து மாதங்களுக்கு முன்னர் வாஷிங்டனில் மத்திய கிழக்கு சமாதான மகாநாட்டிலும் பங்குபற்றியிருந்தார்.

# சர்ச்சில் பிரதமராவதை அரசகுடும்பம் ஏற்கவில்லை

(லண்டன்)

பிரிட்டிஷ் அரச குடும்பம் ஐரோப்பாவில் யுத்தத்தை தவிர்ப்பதற்காக ஹிட்லரையும், முசோலினியையும் திருப்திப்படுத்தமுயன்றது என்றும், யுத்தம் ஆரம்பித்த பின் பிரதம மந்திரியாக வின்ஸ்டன் சர்ச்சில் வருவதை அது விரும்பவில்லை என்றும் நூலொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

புகழ் பெற்ற சர்ச்சில் ஆதரவாளர்கள் என்று தனது நூலிலேயே அன்ட்ரூ ரொபார்ட்ஸ் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ஹிட்லரையும், முசோலினியையும் எதிர்ப்பதற்குப் பதில் அவர்களைத் திருப்திப்படுத்தும் கொள்கையை கடைப்பிடித்து வந்த பிரதமர் நெவில் சேம்பர்லேனை அரச குடும்பம் தீவிரமாக ஆதரித்து வந்தது என்றும், சர்ச்சில் பதவிக்கு வந்து ஏழு மாதங்களின் பின்னரே அரச குடும்பம், சர்ச்சிலுடன் ஒத்துப் போக முயற்சியெடுத்தது என்றும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதியஅரசுஅமைந்தபின்பும் மக்கள் தப்பியோட்டம்

(கிகாலி)

றுவாண்டாவின் தலைநகர் கிகாலியில், தேசபக்த முன்னணியின் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டும், ஆயிரக்கணக்கான அகதிகள் அண்டை நாடான ஸயருக்குள் தப்பியோடிக் கொணடிருக்கின்றனர்.

சுமார் 25 இலட்சம் அகதிகள் ஒன்றில் றுவாண்டாவை விட்டு வெளியேறி விட்டார்கள் அல்லது வெளிறேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என ஸயரிலுள்ள மனிதநேயப் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலோருக்கு உணவு, தண்ணீர், மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன இதனிடையே முன்னாள் றுவாண்டா அரசுத் துருப்புக்களோடு எல்லை சம்பந்தமாக பிணக்கிலீடுபடும் ஸயருடன் உடன்பாடு ஒன்றை எட்டியிருப்பதாகவும், தேசபக்த முன்னணி அறிவித்துள்ளது.

மர் யிற்சாக் ரபின் குற்றம் சாட்டியுள்ளார். இக்குண்டு வெடிப்பு சம்பவத்தில் 26

இந்தப் பிரசாரத்தை நடாத்தி வருவதாகவும் ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

# இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஜனாதிபதி ஒப்புதல்

(சென்னை)

வேலை வாய்ப்புக்களில், 69 சதவீத இடஒதுக்கீட்டை வழங்க, தமிழ்நாடு சட்டசபையில் உருவாக்கப்பட்ட மசோதாவுக்கு, இந்திய ஜனாதிபதி ஒப்புதல்அளித்துள்ளார் மாநில அரசாங்க வேலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பின்தங்கிய வகுப்பினருக்கு 69 சதவீத இட ஒதுக்கீடு வழங்க இம்மசோதா வகை செய்யும்.

இந்திய மத்திய அமைச்சரவையின் முடிவையடுத்தே, ஜனாதிபதிக்கு இம்மசோதா ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. 50சதவீதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு வழங்கப் படக் கூடாது என்ற சுப்ரீம் கோட்டின் தீர்ப்பின்படி இம்மசோதா நடைமுறைக்குவராமல் இதுவரை இருந்தது தமிழ்நாடு மாநில சட்டப்பேரவை சென்ற டிசம்பர் மாதத்தில் இம்மசோதாவை நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது சம்பந்தமாக மாநில அரசுகளுக்கு சட்டவாக்கு அதிகாரம் வழங்க, அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வருமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுள்ளார்.

# தத்துவ அடிப்படையிலேயே இணைவது சாத்தியமாகும்

இந்தியாவின் பழம்பெரும் இடதுசாரிக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகியவை மார்க்சிய லெனினிய கருத்துகளின் அடிப்படையில்தான் இணைந்து செயற்படுவது சாத்தியமாகும். இவ்வாறு மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஹர்சிசன் சிங் சுர்ஜித் கூறியுள்ளார். இணைப்புதொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த இந்திரஜித் குப்தா தெரிவித்திருப்பதுகுறித்து கருத்துவெளியிட்ட அவர்மேலும் கூறுகையில், இருகட்சிகளின் நிலையிலும் இதுபற்றி விவாதித்து தீர்மானம் எடுக்கப்படாமல் பகிரங்கமாக அறிவிப்பது இடதுசாரிகளின் ஒற்றுமைக்கு துணை போகாது எனவும் தெரிவித்தார்.

# அரபுதூதுவர்கள் இருவர் அல்ஜீரியாவில் மறைவு

(டியூனிஸ்)

அல்ஜீரியாவில் அரபுநாட்டு தூதுவர்கள் இருவர் காணாமற் போயுள்ளனர். இவர்களது கார் இவர்கள் காணாமற் போயிருந்த இடத்திலிருந்து சுமார் பத்து கிலோமீட்டர்களுக்கப்பால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுக் கிடந்தது.

அல்ஜீரியாவுக்கான ஓமான், யேமன் நாட்டுத் தூதுவர்களே காணாமல் போனவர்களாவர்.

இவர்களை மீட்பதில் அல்ஜீரிய நாட்டு அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கான யூன் மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருட்களாக அரிசி மாவு, சீனி, பட்டாணிப் பருப்பு, தேயிலை, சிந்தாமணிக் கடலை, மல்லி, பால்மா, நூடில்ஸ், பூடு ஆகிய பொருட்கள் வழங்கப்படும் என யாழ்-செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரண உணவு முத்திரை அடிக்கட்டை மூலம் மேற்படி விநியோகத்தை மேற்கொள்ளும் என தெரிய வருகின்றது. (22)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-07-21 வியாழன் இரவு

08. 01- சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10- உரை - மொழித் தூய்மை காப்போம்
08. 20- உழைப்போம் உயர்வோம் ''மடியழற்சி கறவைகளைப் பாதிக்கும் நோய்''- சித்திரம்
08. 30- செய்திகள்
08. 40- ஏட்டிலிருந்து- நாடு அழைத்தது என்ற நூலிலிருந்து ''பங்களாதேஷ் தேசிய விடுதலைப் போர்'' என்ற கட்டுரையின் சில பகுதிகள்.
08. 50- மலரும் மொட்டுக்கள்.

### 1994 07-22 வெள்ளி காலை

07. 02- மாவீரவணக்கம்
07. 15- விடுதலை கானங்கள்
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

யாழ்ப்பாணம்

# கம்பன் விழாவில் இன்று பட்டிமண்டபம்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஐந்துநாள் கம்பன் விழாவின் 2-வது நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. காலை நிகழ்வாக ஆய்வரங்கும் மாலை 4.30 மணிக்கு மங்கள இசை, பட்டிமண்டபம் என்பனவும் இடம்பெறும்

கம்பன் விழா நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள விழாப் பந்தலில் நடைபெறவுள்ளது.

## ஒய்வூதியம்

(கொழும்புத்துறை)

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோருக்கான யூலை மாதக் கொடுப்பனவு தற்போது யாழ். அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சக கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருவதாக அதன் முகாமையாளர் திரு. ஆ. வசந்தகுமார் அறிவித்துள்ளார். (24)

## கண்டெடுப்பு

தாவடிச் சந்தியில் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்குரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.


சூராவத்தை
முத்துமாரி அம்மன் ஆலய
தேர்த்திருவிழா 21-07 1994

இன்று காலை 11.30 – 1.00 மணி வரை
தெய்வீக இசையரங்கு
12.00 மணியளவில் அடியார்களுக்கு
அன்னதானம் வழங்கப்படும்

இரவு சிறப்பு நீகழ்ச்சியாக 8.00 மணிக்கு
பிரபல இசையமைப்பாளர் யாழோசை கண்ணனின்
★ இன்னிசை கானங்கள் ★

சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய
இந்து இளைஞர் மன்றம்,
சுண்ணாகம்.
(8870)



யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
முழுநிலா நாட் கருத்தரங்கு

காலம்: — 22-07-94ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி.
இடம்; — குமாரசுவாமி மண்டபம்
கருத்துரை 1 — உள்ளூராட்சி அமைப்புகளும் தற்போதைய நிலையும்
வழங்குபவர் — திரு. க. பரமேஸ்வரன், பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்.
கருத்துரை 11 — சர்ச்சைக்குரிய கச்சதீவு ஓர் கண்ணோட்டம்.
வழங்குபவர் — திரு. சூசை ஆனந்தன், விரிவுரையாளர், புவியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்.


# இராணுவ தளபாடக்கொள்வனவில் ஜனாதிபதிக்கு தரகுப்பணம்

## பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவ தளபாடங்கள் கொள்வனவில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் தரகுப்பணம் பெற்றுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

குறைந்த விலையில் ஆயுதத் தளபாடங்களை பெறக்கூடிய நிலையில் அதை விடுத்து சுமார் 240 கோடி ரூபா செலவில் ரஷ்யாவிடமிருந்து ஆயுதம் வாங்க ஜனாதிபதி ஒப்பந்தம் செய்ய அனுமதித்ததாக இம் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

தாம் ஆட்சிக்கு வந்தால் இந்த ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தத்தை ரத்து செய்வோம் என இம் முன்னணி எச்சரித்துள்ளது.

## பொதுச்சபை கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது பொதுச் சபைக் கூட்டம் எதிர் வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு மேற்படி சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி மு. தங்கராசா தலைமையில் யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க வைத்திய சாலையில் நடைபெறும். (24)

## வீரச்சாவு

இன்று காலை 10.00 மணிக்கு இவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை சென் நீக்கிளஸ் ச. சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும் அஞ்சலிக் கூட்டம் நிறைவுற ஐந்து சந்தி ஊடாக ஆனைப்பந்திச் சந்தியை அடைந்து பின் கோவில் வீதி ஊடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சகல இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் வித்துடல் விதைக்கப்படும்.


யாழ். ஸ்ரீதரில்
தினசரி 4.00 மணி
உயிராயுதம்
தினசரி 6.00 மணி
சனி, ஞாயிறு 10.30, 6.00 மணி


அதிகார துஷ்பிரயோகம், ஊழல்குறித்து

# ஜனாதிபதி குழுமுன் சாட்சியமளிக்க தயார்

அரசியல் வாதிகளின் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் என்பன குறித்து ஆராய ஜனாதிபதி விசாரணைக் குழு அமைக்கப்பட்டால் அதில் சாட்சியமளிக்க தான் தயார் என முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் காலிங்க ஓபேவன்ச தெரிவிதத்ார்.

இவ்வாறான விசாரணைக் குழு ஒன்றின் முன்னால் அரசியல் வாதிகளின் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் குறித்து தனது முழுமையான சாட்சியத்தையும் கருத்துக்களையும் தான் எந்த நேரமும் தெரிவிக்கதயார் நிலையில் இருப்பதாகஅவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி

உணரமுடியாதகுறுகிய நேரத்தில் நடக்க வேண்டியதெல்லாம் நடந்து விட்டது என இச்சம்பவத்தை நேரில் பார்த்த பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

மனித எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்ட இடமான எம்பிலிபிட்டியவிற்கு ஜனாதிபதி சென்றதைக் கண்டித்து மக்கள் திட்டமிட்டே இதனைக் குழப்பினர்என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வல்வையில்

தங்கரத்தினம், ஆதர். செல்லாகுமாரசுவாமிப்பிள்ளைமகேந்திரம் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன.

இக் குண்டு வீச்சு தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த உலங்கு வானூர்தியொன்று கலிபர் தாக்குதலை நடாத்தியது. (யோ)

## ஆகாயத்

வானூர்தி ஒன்று பரவலாக கலிபர் தாக்குதலை தொடர்ந்து மேற்கொண்டது.

இக் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு அஞ்சிய தொண்டமனாறு, வல்வெட்டித்துறை பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நாடினர்.

இதனால் நேற்று நடைபெற்ற இரண்டாம் தவணைப் பரீட்சைகள் குழம்பியதாகவும்

## தேர்தல்

வேறொரு கட்சியைத் தாக்கிப் பேசுவது சட்டவிரோதமானது. கடந்த 16ஆம் திகதி தொலைக் காட்சியில் உரையாற்றிய ஐ, தே. க செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர வேட்பாளர் மனு தாக்கல் செய்த போது, நடைபெற்ற சம்பவங்களுக்கு பொது ஜனஐக்கிய முன்னணி முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என தெரிவித்துள்ளமை தேர்தல் விதிமுறைக்கு முரணானது என சிறிமாவோ பண்டார நாயக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.

## புலிகளின்

சீலன் நகர் (88), நாவற்குழி, தொழில்: நகைத்தொழில்.

★ தர்மலிங்கம் ஜெகநாதன் வேறு பெயர்: லிங்கம் ]முரளி வயது 18, முகவரி: நாயன் மார்திடல், தம்பலகாமம்.

ஆகிய மேற்படி நபர்கள் பற்றிய மேலதிக தகவல்கள் ஏதுமிருப்பின், கடிதம் மூலமோ அல்லது நேரிலோ, 'செய்தித் தகவல் மையம், கோப்பாய் சந்தி, கோப்பாய்' என்னும் முகவரிக்கு அறியத்தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகின்றனர்.

## சிறிலங்கா

பில் காணப்பட்ட மீனவர்களை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் மீனவர்கள் எதுவித உயிர்ச் சேதமும்

# டி, பி.யின் மேதின சலுகை தேர்தலின் பின்பே அ்முல்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி, பி. விஜேதுங்கா மேதினத்தன்று அறிவித்த சம்பள உயர்வு தவிர்ந்த ஏனைய சலுகைகள் அனைத்தும் புதிதாக அமையவுள்ள பாராளுமன்றத்தின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று மாலைநடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இவ்வாறு தெரிவித்த பிரதமர்மேதினத்தில் ஜனாதிபதி அறிவித்த சலுகைகளில் சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் ஓரிருமாதங்களில் இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவரினால் அறிவிக்கப்பட்ட ஏனைய சலுகைகள் வரும் பாராளுமன்றத்தின் அனுமதியுடனேயே மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் என்றார். அத்துடன் தனியார் மயமாக்கல் நடவடிக்கை தொடரும். இது வரை 14 நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டன. மேலும்14நிறுவனங்கள் விரைவில்தனியார் மயப்படுத்தப்படும்எனவும் அவர்தெரிவித்தார்.

பேராசிரியர் அமரர் துரைராசாவின்

# மகரயாழ் விருதை புதல்வர்கள் பெற்றனர்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினால் முன்னாள் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் அமரர் அ. துரைராசா அவர்களுக்கு நேற்று மகரயாழ் விருது வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் வருடாந்த பெருவிழாவின் முதல் நாள் விழா நேற்று நல்லூரில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு தலைமை தாங்கிய யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரட்ணம் அவர்கள் அமரர் துரைராசாவின் புதல்வர்களான அரவிந்தன், அழகேஸ்வரன் ஆகியோரிடம் தந்தைக்கான மகரயாழ் விருதை வழங்கினார்.

கம்பன் பெருவிழாவின் நேற்றைய தொடக்க விழாவின்போது பல்துறைகளிலும் தொண்டாற்றி புகழ்பூத்த ஆறு மூதறிஞர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## பரீட்சை

யங்களிலுமாக மொத்தம் யாழ். மாவட்டத்தில் 63 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

## பா. உ.

களுடைய ஆயுதங்களை மீளப் பெற்றுக் கொள்வது குறித்து அடுத்த வாரம் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்புஅமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி, ஆளும் கட்சிகளைச் சேர்ந்த 133பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இவ்

## ஒற்றையாட்சி

கட்சியின் பிரதித்தலைவியுமான சந்திரிகா குமாரணதுங்க நேற்று ரூபவாகினியில் ஆற்றிய தேர்தல் பிரசார உரையில் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மூலமே நாட்டில் இன்று நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தை நாம் முடிவிற்குக் கொண்டுவரவிரும்புகிறோம் ஏனெனில் பேச்சுவார்த்தையின் மூலம் மட்டுமே இதனைத் தீர்த்து வைக்க முடியும் என நாம் திடமாக நம்புகிறோம்.

பத்து வருடங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தினால் அப்பாவி இளைஞர்கள் பலியானதும் பல கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டதுமட்டுமே காணப்பட்டது தவிர பிரச்சினைக்கான தீர்வில் எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவே தான்யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு ஒன்றை மேற்கொள்வதே தமது நோக்கம் என தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மட்டும் இணையாது நாடு முழுவதும் ஒன்றிணைந்து சிறிலங்காவில்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,

(சி.9965) யா. இ. க. ப. மா. ச.

6. 00 மணி

JURASSIC PARK

(சி-9950)

பரீட்சைகள் குழம்பியதாகவும் பாடசாலைகள் செயலிழந்ததாகவும் நமது வடமராட்சி செய்தியாளர் அறிவிக்கின்றார். (யோ)

எதுவித உயிர்ச் சேதமும் இன்றி கரைசேர்ந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் கரையோரப் பகுதியில் சவுக்கு, பனை மரங்கள் சில சேதப்பட்டு காணப்படுகின்றன. அத்தோடு சுழிபுரம் வறுத்தோலைப் பகுதியில் சிறு குடிசை வீடு ஒன்றும் சேதமடைந்துள்ளதுடன் பல இடங்களில் பீரங்கி சிதறல் பட்டதனால் சிறு சேதங்களுடன் காணப்படுகின்றன.

மேலும் கடற் படையினருக்கு உதவியாக உலங்கு வானூர்தி ஒன்றும் காலை 7.50 மணியிலிருந்து பொன்னாலை முதல் மாதகல் வரையான கரையோரப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இதே வேளை காரைநகரிலிருந்தும் சுழிபுரம் பகுதியை நோக்கி பல எறிகணை வீச்சு மேற்கொள்ளப்பட்டன. (41)

மன்ற உறுப்பினர்களிடம் இவ்வாறு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக மேலும் அவர் குறிப்பிட்டார்.

இணையாது நாடு முழுவதும் ஒன்றிணைந்து சிறிலங்காவில் ஒற்றை ஆட்சியொன்றை ஏற்படுத்துவதே தனது முழுமையான நோக்கம் என மேலும் அவர் தெரிவித்தார்.

## யாழ். மாவட்டத்தில்

விபரங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு தொகை அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. (24)

## இடிபாடுகளுக்கு

அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் சில மணி நேரத்தில் அவர் மரணமடைந்தார் என்றார். (யோ)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ - து) சுன்னாகம்

# கணக்காளர் பதவி

## குறி. இல. 104:07

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத் திட்டம்:- ரூபா $\frac{1105 - 2170-/-}{60 \times 4,\ 75 \times 11}$

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

**கல்வித்தகைமை:-**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 8வது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்[உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத்திட்டத்தில், உள்ளகக் கணக்காய்வாளர்- கணக்குப் பதிவாளர் / கணக்குகள் அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் 6வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,
அல்லது;

ஆ) ஐக்கிய இராஜ்யத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்குகள் அல்லது கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,
அல்லது;

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர் தரத்தில்) கணக்கியலை உள்ளடக்கியதான மூன்று பாடங்களிலான சித்தியும், கணக்குகள் அல்லது கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

வயது; விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் சங்க தலைமைப் பணியகத்தில் வேலை நாட்களில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 06-08-1994**

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வ-து) - பொதுமுகாமையாளர்
சுன்னாகம்.
19-07-94 (சி-9963)

# மரண அறிவித்தல்

## திருமதி
## கணபதிப்பிள்ளை தையல்நாயகி

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிரவுண் வீதி 144/5இல் வசித்தவருமாகிய திருமதி கணபதிப்பிள்ளை தையல்நாயகி 20-7-1994 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் முன்னாள் வர்த்தகர் பண்டாரவளை) அன்பு மனைவியும் இராசரத்தினம், காலஞ் சென்ற இரத்தினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானேஸ்வரி புனிதவதி ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை 21 - 7 · 1994 பகல் 11மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காககோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
**இராசரத்தினம்**
(மகன்)

144/5 பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம். (8887)

# ஆற்றலைத் தேடி....

**'நாடக அரங்கக் கல்லூரி'**
**புதிதாக தயாரிக்கவிருக்கும் இருநாடகங்களிலும்**
அதனைத் தொடர்ந்து நடத்தவிருக்கும்
**கற்கை நெறியிலும்**
பங்கு கொள்ள விரும்புவோர்
தங்கள் சுய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25-07-94**

தொடர்பு முகவரி:
**இணைப்பாளர்,**
19, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(8886)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
## சுகாதார தொழிலாளர்
# பதவிகள் வெற்றிடம்

மேற்படி பதவிகளுக்காள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 28. 07, 94 வியாழக்கிழமை மு. ப. 10. 00 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

04. 07 94 ஆந் திகதி ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இப்பதவி சம்பந்தமான விளம்பரத்தில் சொல்லப்பட்ட வயது எல்லை 40 லிருந்து 45 ஆக அதிகரிக்கப்படுகிறது. அத்தூடன் இப்பதவிகள் நிரந்தரமானவையாகும்.

வலிதெற்கு பிரதேசசபை, **ஆ. மகாலிங்கம்**
சுன்னாகம். விசேட ஆணையாளர்
20-7-94 [சி-9962]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.